340—

ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்

*19580—திரு. இரா. குமாரகுரு:

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உளுந்தூர்பேட்டை தொகுதி, திருநாவலூரில் வேளாண் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

உளுந்தூர்பேட்டை தொகுதி, திருநாவலூர் கிராமத்தில் வேளாண்மை ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்க சாத்தியக் கூறுகள் தற்போது இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமாரகுரு அவர்கள்.*

திரு. இரா. குமாரகுரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது உளுந்தூர்பேட்டை தொகுதிக்குட்பட்ட திருநாவலூர் ஒன்றியம், திருநாவலூரை மையமாகக் கொண்டு கிட்டத்தட்ட 15 ஆயிரம் ஹெக்டேர் நிலப்பரப்பிலே விவசாயிகள் விவசாயம் செய்து வருகின்றார்கள். அங்கே ஒரு ஆண்டுக்கு ஒரு இலட்சத்து 25 ஆயிரம் டன் விளைநிலங்களில் சாகுபடி செய்து, நெல், மக்காச்சோளம், மணிலா மற்றும் வேளாண் விளைபொருட்களெல்லாம் விவசாயிகள் சாகுபடி செய்து, அங்கேயிருந்து பண்ருட்டிக்கு கிட்டத்தட்ட 18 கிலோ மீட்டர் தூரத்திற்கும், அங்கேயிருந்து திருவெண்ணெய்நல்லூரில் இருக்கின்ற வேளாண்மை விற்பனைக் கூடத்திற்கு 30 கிலோ மீட்டர் தூரத்திற்கும், அதேபோல் உளுந்தூர்பேட்டையில் இருக்கின்ற ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் சுமார் 20 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கின்ற காரணத்தினால், அங்குள்ள விவசாயிகள் எல்லாம் மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். ஆகவே,*

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கு இருக்கின்ற விவசாயிகள் மற்றும் பொதுமக்கள், வேளாண்மை விற்பனைக் கூடத்தை திருநாவலூரை மையமாகக் கொண்டு அமைத்துத் தர வேண்டுமென்பதுதான் நீண்ட நாள் கோரிக்கையாக இருந்து வருகின்றது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று, விவசாயிகளின் நலனில் அக்கறை கொண்டு, இந்த வருடமே அங்கு புதிதாக ஒரு வேளாண்மை விற்பனைக் கூடம் அமைப்பதற்கு முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலமாகக் கேட்டு அமைகிறேன்.

(முற்பகல் 10-25)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செ. தாமோதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநாவலூர் கிராமத்தைப் பொறுத்தவரையில் நெல், மக்காச் சோளம், கம்பு, நிலக் கடலை, என் போன்ற பயிர்கள் 17,300 ஹெக்டேர் நிலப் பரப்பளவில்தான் பயிர் செய்யப்படுகின்றன. திருநாவலூர் கிராமத்திற்கு அருகில் 18 கிலோ மீட்டர் தொலைவிலே உளுந்தூர்பேட்டை ஒழுங்குமுறை விற்பனைக் கூடமும், 12 கிலோ மீட்டர் தொலைவிலே திருவெண்ணெய்நல்லூரில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடமும் இயங்கி வருகின்றன. மேலும், திருநாவலூர் கிராமத்தின் அருகில் உள்ள கடலூர் மாவட்டம், பண்ருட்டியில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் 16 கிலோ மீட்டர் தொலைவில்தான் இயங்கி வருகின்றது. எனவே, திருநாவலூர் கிராமத்தில் உள்ள விவசாயிகள் அருகில் உள்ள உளுந்தூர்பேட்டை, திருவெண்ணெய்நல்லூர் மற்றும் பண்ருட்டி ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களைப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், அதிகமான அளவில் பயிர் உற்பத்தி இருக்கும்பட்சத்தில், தேவையின் அடிப்படையில் வருங்காலத்தில் இந்தப் பிரச்சினையைப் பற்றி நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்செல்லப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு அவர்கள்.

திரு. இரா. குமரகுரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருங்காலத்திலே தேவையிருப்பின் அங்கு ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். கட்டாயம் அந்தப் பகுதியில் இருக்கின்ற விவசாயிகளும் மற்றும் பொதுமக்களும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் தங்களுக்கு வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கின்றார்கள். ஆகவே, மீண்டும் மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்வது என்னவென்றால், அங்கே மூன்று கிராமங்களிலும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் இருந்தாலும், விவசாயிகளின் மேல் அக்கறை கொண்டிருக்கிற மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, விவசாயிகளுக்கு நிறைய சலுகைகளை எல்லாம் வாரி வழங்கி வருகின்ற தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களது ஆட்சியில், என்னுடைய திருநாவலூரில் வேளாண்மை விற்பனைக் கூடம் அமைப்பதற்கு மறுபரிசீலனை செய்து, இந்த வருடமே அங்கு புதிதாக ஒரு விற்பனைக் கூடத்தை ஏற்படுத்தித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டுமென்று நான் மீண்டும் வலியுறுத்தி அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செ. தாமோதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே விழுப்புரம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 17 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் செயல்பட்டு வருகின்றன. அதில், நம்முடைய உறுப்பினர் அவர்களுடைய தொகுதிக்கு அருகிலுள்ள திருவெண்ணெய்நல்லூர் கிராமத்தில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் 3,173 மெட்ரிக் டன் அளவுதான் பொருட்கள் வைக்கப்படுகின்றன. கடலூர் மாவட்டத்திலுள்ள பண்ருட்டியிலும் 9,370 மெட்ரிக் டன்தான், மிகக் குறைந்த அளவிலான பொருட்கள்தான் வைக்கப்படுகின்றன. அவற்றைப் பயன்படுத்திக்கொள்ளலாம். இருந்தாலும்கூட, உறுப்பினருடைய கோரிக்கை ஏற்கப்பட்டு, வருங்காலத்தில் திருநாவலூர் கிராமத்தில் அதிகளவிலான பரப்பளவில், பயிர்கள் அதிகளவில் உற்பத்தி செய்யும் பட்சத்தில், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2013 ஏப்ரல் 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள்.

திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயத்தைப் பிரதானமாகக் கொண்டிருக்கின்ற திருவண்ணாமலை மாவட்டத்தில், கலசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதியில் வேளாண் விளைபொருட்கள் அதிகமாக உற்பத்தியாகின்ற ஆதமங்கலம்புதூர் பகுதியில் அரசின் சார்பில் வேளாண்மை ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் ஒன்றை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அமைத்துத் தருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செ. தாமோதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, திருவண்ணாமலை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 8 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் இயங்கி வருகின்றன. இருந்தாலுங்கூட நம்முடைய உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற இடத்தில் எந்த அளவுக்குப் பயிர் உற்பத்தி ஆகின்றது, எந்த அளவிற்கு விளைபொருட்கள் இருக்கின்றன என்பதைப் பற்றி நம்முடைய அலுவலர்களை அனுப்பி பார்வையிட்டு, தேவையிருப்பின் அதுபற்றிப் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

திரு. பி.வி. கதிரவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதியில் ஏற்கெனவே 40 ஆண்டுகளுக்கு முன்பு ஒழுங்குமுறை விற்பனைக் கூடக் கட்டடம் கட்டப்பட்டது. அது தற்போது பழுதடைந்து இருக்கின்றது. ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் உள்ள பழுதை நீக்கவும், புதிய கட்டடம் கட்டித் தரவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 11-30

மாண்புமிகு திரு. செ. தாமோதரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டியில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் பழுதடைந்திருக்கிறது, புதிய கட்டடம் கட்டித் தரவேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதைப் பார்த்து, அப்படிப் பழுதடைந்திருந்தால் அது சரி செய்து கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 341, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

341—

நியாய விலைக் கடைக் கட்டடம்

***3685—திரு. சி. மைக்கேல் ராயப்பன்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், நக்கலமுடை ஊராட்சி, வள்ளான்விளையிலுள்ள நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செல்லூர் கே. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கின்றேன்.*

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் தொகுதி, ராதாபுரம் ஒன்றியம், நக்கலமுடை ஊராட்சியிலுள்ள, வள்ளான்விளை பகுதிநேர நியாய விலைக் கடை 199 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. இப்பகுதிநேரக் கடை புலிமான்குளம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தால் நடத்தப்பட்டு வருகிறது. இக்கடைக்குக் கடம்பகுளம் அனுமின் இட்ட உதவியுடன்